DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | SC.150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 12 |
| Name | : | **சாலமன்** |
| Father's Name | : | **ஆபிரஹாம்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**( 1வது எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். 2து எதிரி ஆஜர் இல்லை. 2வது எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3 வது எதிரி ஆஜர்)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 22.01.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கல்லுவழி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 அமலி கிரேஸியை தெரியும். சம்பவம் பற்றி எனக்கு தெரியும். கடந்த 26.01.2024ம் தேதி எங்கள் ஊர் சர்ச்சில் காலை 6.30 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது மணி அடித்தார்கள். ஊரில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் சர்ச்சில் மணி அடிப்பது வழக்கம். எங்கள் ஊர் சின்னப்பன் என்பவரது வீட்டின் அருகில் வசித்து வருகிறேன். சின்னப்பன் எனது உறவினர் ஆவார். நான் வெளியில் வந்து மணி அடிப்பது பற்றி விசாரித்தேன்.

2. ஊரில் இருந்த சுமார் 50 நபர்கள் ஒன்று சேர்ந்து சம்பவம் குறித்து விசாரித்தபோது யாரோ அவரது வீட்டில் உள்ளவர்களை தாக்கி காயம்பட்டு அவர்கள் அனைவரும் மயக்க நிலையில் கிடப்பதாக எங்களுக்கு தகவல் தெரியவந்தது. நான் சின்னப்பன் வீட்டிற்கு சென்று பார்த்தேன். வீட்டில் இருந்த சின்னப்பன் அவரது மனைவி உபகாரமேரி, மருமகள் வேதபோதக அரசி, மற்றும் அரவது மகள் ஜெர்லின், மகன் ஜோபின் ஆகியோர்கள் உடம்பில் காயம்பட்டு வீடு முழுவதும் ரத்தமாக கிடந்தது.

3. காயமடைந்தவர்களில் ஜோபின் மட்டும் கொஞ்சம் சுயநினைவில் இருந்தார். நாங்கள் அவரை விசாரித்தபோது எங்களை ஒரு நபர் வந்து அடித்து காயப்படுத்திவிட்டு சென்றுவிட்டதாக சொன்னார். பின்னர் போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். பின்னர் 108 ஆம்புலன்சு வாகனம் வரவழைத்து காயம்பட்டட நபர்களை ஏற்றி சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை வேலம்மாள் தனியார் மருத்துமனைக்கு கொண்டு சென்றதாகவும் சொன்னார்கள். என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சர்ச்சில் மணி அடித்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. காயம்பட்டு கிடந்த விபரத்தை எனக்கு யார் சொன்னார்கள் என்ற விபரத்தை நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. நான் பார்க்கும்போது ஜோபினை தவிர மற்றவர்கள் மயக்கநிலையில் உணர்வற்று கிடந்தார்கள் என்றால் சரிதான். நான் ஜோபினிடம் விசாரித்தபோது ஒரு நபர் மட்டும் தாக்கினார் என்று என்னிடம் சொன்ன விபரத்தை நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றாலும் கேள்விப்படவில்லை என்றாலும் சரியல்ல.

சின்னப்பன் எனக்கு உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 வது எதிரிகள் குறுக்கு விசாரணை:** இல்லை

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.01.22 15:14:21 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**